# ஏசாயா 62 இஸ்ரவேலுக்கான உலகளாவிய 21 நாட்கள் உபவாசம் மற்றும் ஜெபம் (மே 7-28, 2023)

**21 நாட்களும், ஒரு நாளைக்கு குறைந்தது 1 மணிநேரம்,** (மே 7-28) இஸ்ரவேலுக்காக ஜெபத்தில் ஈடுபடும் பத்து இலட்சத்திற்கும் அதிகமான விசுவாசிகளுடன் இணைந்து, எருசலேம் மற்றும் இஸ்ரவேலுக்காக தேவனின் இரட்சிப்பின் வாக்குத்தத்தம் மற்றும் திட்டங்களை தீவிரப்படுத்தும்படி ஜெபிக்க அழைக்கிறோம்.

சிலர் தனியாகவும், சிலர் 2 அல்லது அதற்கு மேற்பட்டவர்களுடன் இணைந்து ஜெபம் செய்வார்கள் (மத். 18:20)–இணையதளத்தின் மூலமாகவோ அல்லது நேரிலோ–தங்கள் வீடு, அலுவலகம், தங்குமிடம் அல்லது அவர்களின் சபை போன்றவற்றில் ஜெபம் செய்வார்கள்.

லூ எங்கிள், ஜேசன் ஹப்பார்ட், மைக் பிக்கிள் உட்பட பல ஆயிரம் ஊழியர்களின் ஒத்துழைப்புடன் **உலகளாவிய அளவில் ஒரு கோடி விசுவாசிகள்** அணிதிரட்டப்பட்டு **உலகளாவிய 21 நாட்கள் உபவாச ஜெப கூட்டத்தில்** பங்கேற்க உள்ளனர் (மே 7-28) இவர்கள் பல்வேறு வழிகளில் உபவாசித்து, இஸ்ரவேலுக்காக தேவனின் நோக்கங்களுக்காக ஜெபிப்பதற்கும், ஏசாயா 62:6-ல் உள்ள அவரது வாக்குத்தத்தின்படி இஸ்ரவேலுக்காக ஒரு கோடி

பேசி ஜெபிப்பவர்களை தேவன் எழுப்பவும், தேவ சித்தத்தின்படி இவர்கள் "பிரிக்கப்படவும்", "நியமிக்கப்படவும்" அல்லது "குறியிடப்படவும்" கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்து ஜெபிப்பார்கள்.

**6 - எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல்முழுதும், இராமுழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம்பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது. 7 - அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும்வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்.** [இயேசு திரும்பி வரும்போது]. **(ஏசா. 62:6-7)**

மார்ச் 7ம் தேதி இந்த உபவாசம் அறிவித்த முதல் 3 வாரங்களில் *பத்து இலட்சத்துக்கும்* அதிகமானோர் பல்வேறு வழிகளில் பங்கேற்க இணைந்தனர். மே 7 ஆம் தேதிக்குள், *பத்து இலட்சத்துக்கும்* அதிகமானோர் இந்த 21 நாள் உபவாசத்தில் பல்வேறு வழிகளில் இணைவார்கள். (சிலர் தண்ணீர் மட்டும் எடுத்துக்கொண்டு உபவாசம் இருப்பார்கள், சிலர் காய்கறிகள், அல்லது பழச்சாறுகள் எடுத்துக்கொண்டு உபவாசம் இருப்பார்கள் அல்லது ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவு எடுத்துக்கொண்டு உபவாசம் இருப்பார்கள், அல்லது வெறும் " ஊடகம்

உபவாசம் இருப்பார்கள்") அவருடைய மகிமையின் வெளிபாட்டிற்காக ஜெபிப்பார்கள் (யாத். 33:18).

**HOPKC** ஜெப அறை இஸ்ரேலுக்காக 3 வாரங்களுக்கு (மே 7-28) 24/7 இடைவிடாமல் ஆராதித்து ஜெபிக்க தங்களை உறுதியளித்துள்ளனர்.

IHOPKC-ல் உள்ள 300-க்கும் மேற்பட்ட முழுநேர ஊழியர்கள் தனிப்பட்ட முறையில் அனைத்து **21 நாட்களுக்கும் ஒரு நாளைக்கு 6-12 மணிநேரம்** எங்கள் ஜெப அறையில் இருந்து ஜெபிக்க உறுதியளித்துள்ளனர். இதனை செய்வதற்கு, தங்களின் சொந்த வேலைகள் பலவற்றை ஒதுக்கித் தள்ளியதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்! IHOPKC ஜெப அறை, இதில் ஈடுபடும் **பல மையங்களில்** ஒன்றாகும். எப்படி உங்கள் சபை அல்லது ஊழியம் இதில் ஒரு **மையமாக** இருக்கலாம், என்பது பற்றிய கூடுதல் தகவலுக்கு https://isaiah62fast.com/ அல்லது **ஏசாயா 62 Fast Facebook** பக்கத்தைப் பார்க்கவும் (https://rb.gy/8orcjp).

https://isaiah62fast.com/ இணையதளம் 21 நாட்களுக்கு (மே 7-28) மக்களை அணிதிரட்டுவதில் ஊழிய ஆதாரங்கள், வழக்கமான தகவல் தொடர்பு போன்றவற்றை வழங்கும் "மையம்" களாக செயல்படும் சபைகள், ஊழியங்கள், வேத பாட குழுக்கள், வாலிப குழுக்கள் போன்றவற்றை அடையாளம் காட்டுகிறது.

https://isaiah62fast.com/ எந்த **காலநிலை காரியங்களையும்** குறிப்பிடவில்லை, ஆனால் அனைத்து நிலைகளிலிருந்தும் விசுவாசிகளை பங்கேற்கும்படி அழைக்கிறது.

**ஏன் ஒரு கோடிபேர்?**

பல ஆண்டுகளாக, இஸ்ரவேலுக்காக **ஒருகோடி** பரிந்துபேசி ஜெபிப்பவர்கள் என்ற தரிசனத்தை கர்த்தர் பல்வேறு வழிகளில் பல்வேறு மக்களுக்கு வழங்கியுள்ளார். எரிக் வாட், ஜேசன் ஹப்பார்ட் (IPC) மற்றும் குழுவினர் சமீபத்திய ஆண்டுகளில் IHOPKC க்கு பல முறை வருகை தந்துள்ளனர். **5,000+ ஜெப நெட்வொர்க்குகளை** மேற்பார்வையிடும் தலைவர்களுடன் இவர்கள் இணைந்து பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் மற்றும் **ஒருகோடியே முப்பது இலட்சம் விசுவாசிகள்** அடங்கும் கூட்டத்தை தொடர்ந்து தொடர்பு கொள்கிறார்கள் (முதலில் அந்த எண்களை நம்புவதற்கு கடினமாக இருந்தது). அவர்களின் சமீபத்திய வருகையில் (டிச. 2022), இந்த 5,000+ ஜெப நெட்வொர்க்குகளின் தலைவர்களும் அவர்களுடன் இணைக்கப்பட்ட **ஒருகோடியே முப்பது இலட்சம்** ஜெப பங்கலர்களும், **2023 ஆம் ஆண்டில் பூமியின் ஒரே பகுதிக்காக 4 முறை** ஜெபிக்க ஒன்றாக இணையவேண்டும் என்று அழைக்கப்படும் உலகளாவிய ஜெப தரிசன முயற்சியான **https://www.110cities.com/** யை பகிர்ந்து கொண்டனர். **வரலாற்றில் முதல் முறையாக** 100 மில்லியனுக்கும் அதிகமான விசுவாசிகள் ஒரே நாளில் நாற்பது இலட்சம் பேர் ஒரே குறிப்புக்காக ஜெபிப்பார்கள்

என்று கருதுவதால் நான் வியப்படைகிறேன் (யோவான். 17:21-23 பார்க்கவும்).

இந்த ஒரு கோடிபேர் ஜெப வீரர்கள் ஜனவரி 22, 2023 அன்று **சீனாவுக்காக** ஜெபம் செய்தனர். அவர்கள் ஏப்ரல் 17 அன்று **மத்திய கிழக்கிற்காக** ஜெபம் செய்வார்கள், **இஸ்ரவேலுக்காக மே 28**, **இந்தியாவுக்காக** அக்டோபர் 31 அன்று ஜெபம் செய்வார்கள்.

இந்த ஒரு கோடிபேர் இயேசுகிறிஸ்துவுக்கும் அவர்கள் அழைக்கப்பட்ட பரம அழைப்பிற்கு ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளவர்கள். ஆனால் அவர்களில் பலர் இஸ்ரவேலுக்கான தேவனின் வேதாகம நோக்கத்துடன் இன்னும் இணைக்கப்படவில்லை. ஆனால் 21 நாள் உபவசத்தின் கடைசி நாளான மே 28 அன்று இந்த ஒருகோடி மக்களும் ஜனவரி 22 அன்று சீனாவுக்காக ஜெபம் செய்தது போல இஸ்ரவேலுக்காக ஜெபம் செய்வார்கள். ஆனால் மே 28 வரையிலான 21 நாட்களுக்கு, **பத்து இலட்சத்திற்கும் அதிகமான** பரிந்து பேசுபவர்கள் உபவாசம் இருப்பார்கள், இஸ்ரவேலுக்கான அவரது நோக்கங்களை புரிந்துகொள்ள இந்த 100 மில்லியனின் இதயங்களை "பரிசுத்த ஆவியானவர் ஆட்கொள்ள வேண்டும்" என்று கேட்டு ஜெபம் செய்வார்கள்.

**சுருக்கம்**. **பத்து இலட்சத்திற்கும் அதிகமான** ஜெப வீரர்களோடு இணையுங்கள், அவர்கள் ஒவ்வொரு நாளும்

இஸ்ரவேலுக்காக குறைந்தது ஒரு மணிநேரம் தனியாகவோ அல்லது 2 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் உடன் இணைந்தோ ஜெபம் செய்வார்கள். (மத். 18:20) இணையதளத்தின் மூலமாகவோ அல்லது நேரிலோ– இஸ்ரவேலுக்காக ஜெபிக்கவும், மே 28 அன்று ஒரு கோடி பேர் இணையும்படி ஆவியானவரிடம் மன்றாடி ஜெபிப்பர்கள்.

**எருசலேமுக்காகவும் இஸ்ரவேலுக்காகவும் ஜெபிப்பதை நாம் ஏன் மிகவும் முக்கியத்துவப்படுத்துகிறோம்?**

இஸ்ரவேல் தேசத்தின் மனந்திரும்புதல் (அப் 3:19) மற்றும் இயேசுவே மேசியா என்று ஒப்புக்கொள்வது (மத். 23:39) ஆகியவை இயேசுவின் இரண்டாம் வருகை, பரம அழைப்பு மற்றும் முழு உலகத்திற்கும் "மரித்தோரிலிருந்து ஜீவன்" (ரோமர் 11:15) என்பவைகளுடன் ஆழமாக இணைக்கப்பட்டுள்ளது. சங்கீதம் 118:26-ன் படி எருசலேமில் உள்ள தலைவர்கள் அவரை மேசியா என்று ஒப்புக் கொள்ளும் வரை இயேசு திரும்ப வரமாட்டார்.

**37- “ஓ எருசலேமே…39 - கர்த்தருடைய நாமத்தினாலே** [இயேசுவின் வருகை பற்றிய குறிப்பு] **வருகிறவர்** [இயேசு] **ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று <u>நீங்கள்</u> <u>சொல்லுமளவும்</u> இதுமுதல் <u>என்னைக் காணாதிருப்பீர்கள்</u>**. [இவ்வாறு, அவரை மேசியா என்று ஒப்புக்கொள்வது–சங்கீதம் 118:26]” **[மத். 23:37-39]**

**20- உங்கள்**[இஸ்ரவேல்] **பாவங்கள் நிவிர்த்திசெய்யப்படும்பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்…19- இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்…21- பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள் எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ளவேண்டும்** [பிதாவின் வலது பக்கத்தில் இருந்தல் அல்லது தக்கவைத்தல்] (அப்போஸ்தலர் 3:19-21).

கடைசிக் காலத்தில் இயேசுகிறிஸ்துவை அண்டிக்கொள்ள இஸ்ரவேல் தேசத்தைத் தூண்டுவதற்கு தேவன் புறஜாதி விசுவாசிகளைப் பயன்படுத்துவார் என்று பவுல் கற்பித்தார்.

11- **அவர்களுக்குள்ளே** [இஸ்ரவேல்] **வைராக்கியத்தை எழுப்பத்தக்கதாக அவர்களுடைய தவறுதலினாலே புறஜாதிகளுக்கு இரட்சிப்பு கிடைத்தது… 14- என் ஊழியத்தை மேன்மைப்படுத்துகிறேன்.** 13- **இனத்தாருக்குள்ளே** [இஸ்ரவேல்] **நான் வைராக்கியத்தை எழுப்பி, அவர்களில் சிலரை இரட்சிக்கவேண்டுமென்று, 15 - அவர்களைத் தள்ளிவிடுதல்** [இஸ்ரவேலை]**உலகத்தை ஒப்புரவாக்குதலாயிருக்க, அவர்களை அங்கிகரித்துக்கொள்ளுதல் என்னமாயிராது; மரித்தோரிலிருந்து ஜீவன் உண்டானதுபோலிருக்குமல்லவோ?** (ரோமர் 11:11-15)

இந்த 21 நாள் **உலகளாவிய ஏசாயா 62 உபவாசம்** செய்யும், இந்த நேரத்தில் நாடுகள் முழுவதும்,

கிறிஸ்துவின் சரீரத்தில் இஸ்ரவேல் பற்றிய சிந்தனையை எழுப்பும் வேதாகம தரிசனங்களைத் துரிதப்படுத்தும். இந்த உபவாசம் பெந்தெகொஸ்தே தினமான மே 28 அன்று முடிவடையும். இந்த நாளில், ஒருகோடி விசுவாசிகள் தேவனின் அழைப்புக்கு பதிலளிக்கும் விதமாக, ஜேசன் ஹப்பார்ட், எரிக் வாட் மற்றும் **"110 நகரங்கள்"** குழு உடன் இணைந்து 2023 இல் 4 முறை இஸ்ரவேலுக்காக ஜெபம் செய்ய அவர்கள் திரட்டப்படும்படி ஜெபிப்பார்கள். https://www.110cities.com/ ஐப் பார்க்கவும், ஏப்ரல் 17 அன்று, இதே 100 மில்லியன் விசுவாசிகள் முழு மத்திய கிழக்குக்காகவும் ஜெபம் செய்வார்கள்.

இஸ்ரவேலுக்கான தேவனின் வாக்குத்தத்தங்களுக்காக, பத்து இலட்சத்திற்கும் அதிகமானோர் 24 மணி நேரமும் தொடர்ந்து 21 நாட்கள் ஜெபத்தில் ஈடுபடுவது **வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்**. தனித்தன்மை வாய்த்த இந்த ஜெபமே காலத்தின் அடையாளமாகும் மற்றும் இஸ்ரவேலுக்கான தேவனின் "குறித்த நேரமும், சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்" நோக்கங்களில் ஒன்றாக ஈடுபடுவதே ஆகும் (சங். 102:13, 18)

**13 - தேவரீர் எழுந்தருளி சீயோனுக்கு** [எருசலேம்]**இரங்குவீர்; அதற்குத் தயைசெய்யுங்காலமும், அதற்காகக் குறித்த நேரமும் வந்தது… 18 - பின்சந்ததிக்காக இது எழுதப்படும்; சிருஷ்டிக்கப்படும் ஜனம் கர்த்தரைத் துதிக்கும்.** (Ps**. 102:13-18)**

இந்த 21 நாள் உபவாசம் **"உலகளாவிய எஸ்தர் தருணம்"** (எஸ்தர். 4:14-16) இஸ்ரவேலுக்கான தேவனின் நோக்கங்களை தைரியமாக பேசுவதும் (வேதத்தில் காணப்படுவது) இயேசு திரும்பி வரும் வரை யூத எதிர்ப்பு அதிகரிக்கும் போது இஸ்ரவேலுடன் நிற்பதும், இந்த மில்லியன் கணக்கான விசுவாசிகள் ஜெபத்தில் ஈடுபடும் இந்த இறுதி உலகளாவிய எஸ்தர் தருணம் குறிப்பிடத்தக்க விதத்தில் முன் செய்யும் ஆயத்த காரியமாக இருக்கும். (சக. 14:1-5) இஸ்ரவேல் பல குறிப்பிடத்தக்க எதிர்ப்புகளை எதிர்கொள்வதால் இந்த உபவாசம் இன்றைய கால கட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது

**14 - நீ இந்தக் காலத்திலே மவுனமாயிருந்தால்**[பதிலளிக்காமல்], **யூதருக்குச் சகாயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும்… நீ இப்படிப்பட்ட காலத்துக்கு உதவியாயிருக்கும்படி உனக்கு ராஜமேன்மை கிடைத்திருக்கலாமே, யாருக்குத் தெரியும்?' 15 - அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு மறுபடியும் சொல்லச்சொன்னது: 16 - நீர் போய், யூதரையெல்லாம் கூடிவரச்செய்து… எனக்காக உபவாசம்பண்ணுங்கள்**…"
[எஸ்தர். 4:14-16]

36 ஆண்டுகளாக எருசலேம் பிரார்த்தனை இல்லத்தை வழிநடத்திய டாம் மற்றும் கேட் ஹெஸ் ஆகியோருக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்

[https://jhopfan.org/] மற்றும் ஏறக்குறைய 20 ஆண்டுகளாக எருசலேமில் சுக்காட் ஹாலலை வழிநடத்திய ரிக் மற்றும் பாட்ரிசியா ரைடிங்ஸ் [https://succathallel.com/ ] அத்துடன் கடந்த 20+ ஆண்டுகளில் நிறுவப்பட்ட பிற ஜெப ஊழியங்களுக்காகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்.

இந்த உபவாசத்தில் நாம் இயேசுகிறிஸ்துவின் மேன்மையை உயர்த்துகிறோம், மேலும் எருசலேமின் மீது தேவனின் ஆசீர்வாதத்தை நிறைவேற்றும் பரம அழைப்பில் கவனம் செலுத்துகிறோம். "யோவான் 17:21-23 வசந்தின் படி ஆவியில் ஒறுமைபட்டு நாம் இன்னும் மேலான பல காரியங்களை கர்த்தருக்கு செய்ய இயலும்.

ஜேசன் ஹப்பார்ட் எழுதிய **மொராவியன் மிராக்கிள்** என்ற இலவச டிஜிட்டல் புத்தகத்தைப் பதிவிறக்கவும், 24/7 பிரார்த்தனையை (100 ஆண்டுகள் தொடர்ந்தது) புராட்டஸ்டன்ட் வரலாற்றில் முதல் பணி இயக்கத்துடன் இணைத்த **கவுண்ட் ஜின்சென்டார்ஃப்** பற்றிய குறிப்பிடத்தக்க கதையைச் சொல்கிறது. https://isaiah62fast.com/ இல் இந்த PDF புத்தகத்தைக் கண்டறியவும் அல்லது YouTube இல் அவரது கதையைப் பார்க்கவும்.